**இந்து கலாசார நிதியம் - 2022**

**-----------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இந்து காலாசார நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கூற்று, திரண்ட நிதியங்கள் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1985 இன் 31 ஆம் இலக்க இந்து கலாச்சார நிதியச் சட்டம் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு செயற்படுத்தப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் ஈடுபாட்டை தீர்மானிக்கப்படுகின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 751 மற்றும் 763 | நிதிக் கூற்றுக்களில் காணப்படும் ரூபா 6,330,454 பெறுமதியான விற்பனை அடிப்படையில் வைக்கப்பட்டிருந்த புத்தகங்களுக்குரிய இருப்பு பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | யுாழ்ப்பாணம், மட்டக்களப்பு மற்றும் கொழும்பு கிளைகளின் பிரகாரம் பிரதான இருப்பு பதிவேடு நாளது வரையாக்கப்பட்டு பராமரித்து கணக்காய்விற்கு விரைவில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | புத்தக இருப்பு தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 9,097,733 ஆன மிகை இருந்ததுடன் அதற்கொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,221,118 ஆக இருந்தது. . அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 6,876,615 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வதிகரிப்பிற்கு திருமுருகண்டி பிள்ளையார் கோவிலிருந்து கிடைத்த நிதி உதவி அதிகரித்தமை மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் அதிகரித்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது 14 இந்துக் கோவில்களின் நிர்மாண செயற்திட்டங்களுக்காக ரூபா 7.75 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்கான மதிப்பீடு , பற்றுச்சீட்டுக்கள் மற்றும் வேலை முடிவுற்றமைக்கான சான்றிதழ்களை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிககைகள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைப எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த பிரதேசச் செயலாளர் களிடமிருந்து அறிக்கைகளை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | எசயற்திட்டங்களுக்கு நிதியேற்பாடுகள் வழங்கும் போது முறையான வேலைத்திட்டமொன்று தயாரித்து முறையான மேற்பார்வையொன்றுடன் நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் பாதீட்டு அறிக்கையின் பிரகாரம் கொடிகள் மற்றும் புத்தகங்கள் விற்பனையிலிருந்து முறையே ரூபா 5 மில்லியன் மற்றும் ரூபா 2.8 மில்லியன் வருமானமொன்றை பெற்றுக்கொள்வதற்கு மதிபபீடு செய்யப்பட்டிருந்த போதும் கொடி விற்பனையிலிருந்து ரூபா 1.5 மில்லியன் மாத்திரம் வருமானமாக உழைக்கப்பட்டிருந்தது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 03 மில்லியன் மற்றம் ரூபா 05 மில்லியன் இந்து புத்தகங்களை அச்சிடுவதற்கும் அறநெறி பாடசாலை பிள்ளைகளின் கற்றல் உதவி பொருட்களாக ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 2.8 மில்லியன் ஆன வருமானமொன்றை உழைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது. யாழ்ப்பாணம், கொழும்பு மற்றும் மட்டக்களப்பு பிரதேசங்களில் கண்காட்சிகள் நடாத்தப்பட்ட போதும் ரூபா 1.5 மில்லியனான வருமானத்தை மாத்திரம் புத்தக விற்பனையால் உழைக்க முடிந்தது. நாட்டில் காணப்பட்ட நிலைமையால் எதிர்பார்த்த நிகழ்ச்சிகளை செயற்படுத்த முடியவில்லை. | பாதீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலக்குகள் நிறைவேற்றப்பட வேண்டும். |

## 3.3 நிதியத்தின் குறைப்பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இந்து கலாசார நிதியத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு உரியதாக தயாரிக்கப்பட்ட மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இந்துக் கல்வி மற்றும் கலாசார நடவடிக்கைகள் மற்றும் இந்து சமய அலுவல்களை மேம்படுத்துவதற்குரியதாக பாதீட்டு அறிக்கையின் பிரகாரம் கொடிகள் மற்றும் புத்தகங்கள் விற்பனையிலிருந்து முறையே மொத்தம் ரூபா 16 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் ரூபா 3.4 மில்லியன் செலவு செய்யப்பட்டு இந்து சமய புத்தகங்களை அச்சிடுவதற்காக மாத்திரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப் பட்டுள்ள அனைத்து செயற்பாடுகளும் நாட்டில் ஏற்பட்ட நிலைமைகளினால் அடைய முடியாதிருந்ததாக | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் இலக்குளை நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின்** | | |
| (i) 38(ஊ) மற்றும் 40 ஆம் பிரிவுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யும் சந்தர்ப்பத்தில் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உள்ளக கணக்காய்வு செயற்பாட்டை முறையாக செயற்படுத்துவதற்காக செயற்திறனான நடைமுறையொன்று உள்ளதாக உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் நிதியம் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் சுயாதீன மற்றும் செயற் திறனான கணக்காய்வு செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். | தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு செயற்பாட்டை முறையாக செயற்படுத்துவதற்காக செயற்திறனான நடைமுறையொன்று ஏற்படுத்த வேண்டும். |
| (ii) 41(1) பிரிவின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு | 2023 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டிற்கான | தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் |

| | | |
|---|---|---|
| நியமிக்கப்பட்டு அதன் பிரகாரம் நிதியத்தின் தொழிற்பாட்டை தொடர்ச்சியான வகையில் மீளாய்வு செய்வதற்கு மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் 2023 மார்ச் 28 ஆந் திகதி நடாத்தப்பட்டது. | முகாமைத்துவக் குழுவினை செயற்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்தம் அடுத்த ஆண்டின் பாதீட்டை அந்நிதியத்தின் நோக்கத்திற்கு இணங்க தயாரித்து உரிய அமைச்சின் செயலாளரினதும் கௌரவ அமைச்சரினதும் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டு நடப்பாண்டின் செப்தம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் பொது திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டியதுடன் அதன் பிரதியொன்று அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கும் அனுப்ப வேண்டும். எவ்வாறாயினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் பாதீடு என்பன 2023 ஆம் ஆண்டிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பாதீடு அங்கீகரிகரித்துக் கொள்ளப்பட வேண்டும். |